பணியாளர் மற்றும் நிர்வாக
சீர்திருத்தத் (கே) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
**தை 30, திருவள்ளுவர் ஆண்டு, 2040**

**கடித (டி) எண். 17, நாள் 12.02. 2009**

அனுப்புநர்
கே.என். வெங்கட்ரமணன்., இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

பெறுநர்
1) இயக்குநர்,
முன்னாள் படைவீரர்கள் நலத்துறை,
22, இராஜா முத்தையா சாலை, சென்னை–3.

2) சிறப்புஆணையர் மற்றும் ஆணையர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை,
கிண்டி, சென்னை–32.

ஐயா,

பொருள்: பொதுப்பணிகள் – முன்னாள் படைவீரர் நலன் – முன்னுரிமைச் சான்றிதழ் வழங்குதல் – ஆணயிடப்பட்டது – முன்னுரிமைச் சான்றிதழினை பயன்படுத்தாத பொழுது குடும்பத்தில் உள்ள பிறிதொருவருக்கு முன்னுரிமைச் சான்றிதழ் வழங்குதல் – திருத்தம் வெளியிடப்படுகிறது.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.1161, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 22.11.84.
2) அரசுக் கடித எண். 69043/2000–2, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 19.02.2001.
3) அரசுக் கடித எண். 23213/ஆர்/2001–20, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 5.6.2003.
4) முன்னாள் படைவீரர் நல கூடுதல் இயக்குநரின் ந.க.எண். 20868/2002/வே.1, நாள் 16.07.2003.
5) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரின் கடித எண். பப1/36635/2002, நாள் 25.3.2004.

*****

பார்வை மூன்றில் கண்ட அரசு கடிதத்தில் முன்னாள் படைவீரர் மற்றும் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்பகம் மூலம் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிப்பது சம்பந்தமாக கீழ்கண்ட அறிவுரைகள் வெளியிடப்பட்டன:-

“முன்னாள் படைவீரர் குடும்பத்தைச் சார்ந்த வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்ட ‘முன்னுரிமைச் சான்றிதழ்’ பயன்படாநிலையில், அம்முன்னுரிமைச் சான்று,

.....2

அக்குடும்பத்தைச் சார்ந்த வேறொரு நபருக்கு (வாரிசுதாரருக்கு) வழங்கப்படுவதை பொறுத்தமட்டில், இது குறித்த விண்ணப்பம் "**முன்னாள் படைவீரர் நல இயக்கத்தில் பெறப்பட்ட பின்னர்**", அம்மனுதாரார் எந்த மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பகத்தினை தொடர்பு கொண்டு, முன்னுரிமைச் சான்றிதழ் பெற்றிருந்த நபர் வேலை பெறவில்லை என்பதை உறுதி செய்த பின்னர், விண்ணப்பம் அளித்த, அக்குடும்பத்தைச் சார்ந்த வேறொரு வாரிசுதாரருக்கு 'முன்னுரிமைச் சான்றிதழ்' வழங்க **முன்னாள் படை வீரர் நல இயக்கத்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.** அவ்வாறு சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், அதன் அடிப்படையில், சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பகத்தில் அந்நபரின் பெயரை முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்".

2. மேற்சொன்ன அறிவுரைகள் நடைமுறைப் படுத்திடும்போது ஏற்படும் சிக்கல்களை கருத்தில் கொண்டு, பார்வை மூன்றில் கண்ட அரசுக் கடிதத்தில் சொல்லப்பட்ட 'முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என்பதை "**அந்தந்த மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை / உதவி இயக்குநர் அலுவலகத்தில்**" என திருத்தம் வழங்குமாறு முன்னாள் படைவீரர் நல இயக்கக் கூடுதல் இயக்குநர் பார்வை நான்கில் கண்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். இதனை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரும் பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்சொன்ன பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்க முடிவுசெய்துள்ளது. அதன்படி, பார்வை மூன்றில் கண்ட அரசுக் கடிதத்தில் பத்தி மூன்றில் கண்ட "**முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்**" என்பதற்கு, "**அந்தந்த மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை/உதவி இயக்குநர் அலுவலகத்தில்**" எனத் திருத்தம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

SD/- x x x x x x x x
அரசுச் செயலாளருக்காக

நகல்:
அனைத்துத்துறை செயலாளர்கள், சென்னை–9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்
பொதுத் (முன்னாள் படைவீரர் நலம்) துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
அனைத்து மாவட்ட முன்னாள் படைவீரர் நல
உதவி இயக்குநர் / துணை இயக்குநர் அலுவலகங்கள்.
அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள்.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்துப் பிரிவுகள்.